

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (28.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.

## அமித்ஷா கட்டும் ஆகாயக் கோட்டை!




### உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் கோப்பை - 2025

# செஸ் சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவிற்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 30 -

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற UzChess மாஸ்டர்ஸ் கோப்பை 2025இல் சாம்பியன் பட்டம் வென்ற செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



**UzChess மாஸ்டர்ஸ் கோப்பை 2025இல் வென்றதற்கும், கிளாசிக்கல் வீரர் தரவரிசையில் இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்ததற்கும், லைவ் ரேட்டிங் மதிப்பீட்டில் உலகின் நம்பர் 4 வீரராக உயர்ந்ததற்கும் பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்துகள்.**

**வெற்றிப் பாதையில் தொடரும் வாகையரான அவரது கரங்களில் செக்மேட் செய்யமுடியாத எதிர்காலம் உள்ளது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102 - ஆவது பிறந்த நாளை முன்னிட்டு

# பெரம்பலூர் மாவட்டத்தில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் !

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஜூன் 30 -

பெரம்பலூர் மாவட்டத்தில் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுவது குறித்து மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை வருமாறு:

30.06.2025! - மாலை 6.00 மணி. பெரம்பலூர் ஒன்றியம், செங்குணம் கிராமம். வி.பி.இராஜன். மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர்.

01.07.2025 - மாலை 6.00 மணி. வேப்பூர் கிழக்கு



ஒன்றியம். கீழப்பெரம்பலூர். சேலம் கோவிந்தன். தலைமை கழக பேச்சாளர்.

02.07.2025 - மாலை 6.00 மணி. பெரம்பலூர் நகரம். துறைமங்கலம். போடி. காமராஜ். தலைமை கழக பேச்சாளர்.

03.07.2025 - ாலை 6.00 மணி. ஆலத்தூர் மேற்கு ஒன்றியம். நாட்டார்மங்கலம். சேலம் சுஜாதா. தலைமை கழக பிரச்சார குழு செயலாளர்.

04.07.2025 - மாலை 6.00 மணி. வேப்பூர் மேற்கு ஒன்றியம். பெண்ணக்கோணம். வழக்கறிஞர் சித்திக். தலைமை கழக பேச்சாளர்.

05.07.2025 - மாலை 6.00 மணி. வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம். மலையாளப்பட்டி. சாவல் பூண்டி சுந்தரேசன்.

06.07.2025 - மாலை 6.00 மணி. வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம். மேட்டுப்பாளையம். சிவாஜி கிருஷ்ணமூர்த்தி. தலைமை கழக பேச்சாளர்.

இந்த கூட்டங்களை ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் நடத்திட வேண்டும்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணகிரி – ஓசூர் கல்வி மாவட்டங்களில் 16 பள்ளிகளில்

# ரூ.4 கோடியே 44 இலட்சத்தில் ஸ்டெம் கண்டுபிடிப்பு - கற்றல் மையங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

கிருஷ்ணகிரி, ஜூன் 30 -

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அரசு உருது மேல்நிலைப்பள்ளியில், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் கல்வி மாவட்டங்களில் உள்ள 16 பள்ளிகளில் ரூ.4 கோடியே 44 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, மாநில தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நரேஷ் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சிறப்புரை ஆற்றிய போது

பள்ளிக் கல்வித் துறை மற்றும் அமெரிக்கா இந்தியா அறக்கட்டளையின் கூட்டு முயற்சியின் கீழ், கிருஷ்ணகிரி கல்வி மாவட்டத்தில், ஆலப்பட்டி, சின்னமேலுப்பள்ளி, கே.ஆர்.பி.அணை, கங்கலேரி, கனகமுட்லு அரசு மேல்நிலைப்பள்ளிகள், பச்சிகானப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 8 பள்ளிகளிலும், ஓசூர் கல்வி மாவட்டத்தில், அலசநத்தம், பெத்ராபள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள், பாகலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஓசூர் அரசு உருது மேல்நிலைப்பள்ளி, ஆர்.வி.அரசு மேல்நிலைப் பள்ளி, மூக்கண்டப்பள்ளி, பாரதியார் நகர் அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் ஜூஜூவாடி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய 8 பள்ளிகள் என மொத்தம் 16 பள்ளிகளில் ரூ.4 கோடியே 44 இலட்சம் மதிப்பில் STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, வெண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், அவர்களின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதியின் (CSR) கீழ், பள்ளியில் எழுத்தறிவு பயிற்சி மையத்தை நிறுவுவதற்கு ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. இந்தப் பங்களிப்பு மூலம் கற்பித்தல் மற்றும் கற்றல் வளங்களின் தரம் மேம்படும்.

இந்தியா முழுவதும் 83 STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்கள் செயல்பட்டு வருகிறது. அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 33 மையங்கள், அதில் 16 மையங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்கள் மூலம் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்தில் நேரடி, விசாரணை அடிப்படையிலான கற்றலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், பள்ளிக் கல்வி அமைச்சகத்துடன் இணைந்து அமெரிக்க இந்தியா அறக்கட்டளை (AIF) இந்த மையங்களை அமைத்துள்ளது.

விமர்சன சிந்தனை மற்றும் புதுமை திறன்களை வளர்க்க மாணவர்களுக்கு ரோபாட்டிக்ஸ் கருவிகள், 3 D அச்சுப்பொறிகள், குறியீட்டு தளங்கள் மற்றும் டிஜிட்டல் கருவிகள் வழங்கப்படுகின்றன.

எழுத்தறிவு பயிற்சி மையம் மூலம் ஆரம்பக் கற்றல் சவால்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு, தொடக்கப் பள்ளி மாணவர்களிடையே அடிப்படை எழுத்தறிவு மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது. இது குழந்தைகள் வாசிப்பு மற்றும் எழுதுதலில் தர அளவிலான தேர்ச்சியை அடைய உதவும் வகையில் கட்டமைக்கப்பட்ட கற்பித்தல் முறைகள் மற்றும் தனிப்பட்ட ஆதரவைப் பயன்படுத்துகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், சுகாதாரத்தையும் இரண்டு கண்கள் என்ற கூறுவார். ஜனநாயக ரீதியாக ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அளவுகோல் எங்கு இருந்து வருகிறது என்றால், சுகாதாரம், மருத்துவம், கல்வி எப்படி இருக்கின்றது என்பதை சார்ந்து தான் ஒரு ஜனநாயகத்தோடு ஒரு நாடு விளங்குகின்றதா என்பது ஒரு அளவாக பார்க்கப்படுகிறது. அதனால்தான் கல்வி மற்றும் மருத்துவத்துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதிக முக்கியத்துவம் அளித்து வருவதனால் இந்தியாவிலேயே கல்வியில் ஒரு முன்னேறிய மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது.

அரசு பள்ளி மாணவர்கள் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்பதற்காக கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் ரூ.65 கோடி ஒதுக்கீடு செய்து 2,686 பள்ளிக்கூடங்களில் உள்ள திறன்மிகு வகுப்பறைகள் மேம்படுத்தப்பட உள்ளது. ரூ.56 கோடி மதிப்பில் 880 பள்ளிக்கூடங்களில் ஏற்கனவே உள்ள திறன்மிகு வகுப்பறைகளை தற்போதுள்ள டெக்னாலஜிக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட உள்ளது. ரூ.160 கோடி ஒதுக்கீடு செய்து 2,000 பள்ளிகளுக்கு புதியதாக உயர்தொழில்நுட்ப ஆய்வகம் அமைக்கப்பட உள்ளது. உலக அளவில் புதிய தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்படும் அடுத்த நாளில் தமிழ்நாட்டிலும் அத்தொழில்நுட்பங்கள் செயல்படுத்தும் விதமாக நமது டெக்னாலஜி உருவாக்க பள்ளி மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

எவ்வளவு டெக்னாலஜி இருந்தாலும், ஒரு வகுப்பறையில் 40 மாணவர்கள் முன்பு ஒரு ஆசிரியர் உணர்வுபூர்வமாக பாடம் நடத்துவதற்கு சமமாக இருக்காது. மாணவர்களுக்கு பாடப்பகுதிகள் எளிதில் புரிந்து கொள்ள ஆசிரியர்கள் பல்வேறு கற்றல் உபகரணங்கள் மூலம் கற்பிக்கின்றனர். எனவே மாணவர்கள் ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளை கேட்டு நடக்க வேண்டும். பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை பிற மாணவர்களுடன் ஒப்பிட்டு பேசக் கூடாது. ஒவ்வொரு மாணவர்களிடமும் ஒவ்வொரு திறமைகள் உள்ளதால், அவர்களிடம் உள்ள திறமைகளை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கண்டுபிடித்து வெளிக்கொணர வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் கலைத்திருவிழா என்ற நிகழ்ச்சி நடத்த உத்தரவிட்டார். இதன் மூலம் கவிதை, பாடல், ஓவியம் சார்ந்த போட்டிகளில் ஒரு கலையரசன், ஒரு கலையரசி தேர்ந்தெடுத்து விருது வழங்கி வருகிறார்கள். இந்த கலைத்திருவிழா மாணவர்களின் திறமைகளை கண்டறிய ஒரு வாய்ப்பாக அமைகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்ற நிலை மாறி, தற்போது முன்னேறிய மாவட்டமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 10 ம் வகுப்பு பொதுத்தேர்வில் 18 வது இடத்தையும், 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் 21 வது இடத்தை பெற்றுள்ளது. அடுத்த ஆண்டு 5 வது இடத்திற்கு முன்னேற தலைமையாசிரியர்கள், ஆசிரிய பெருமக்கள், மாணவர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அண்ணா தலைமைத்துவ விருதிற்கு தலைமையாசிரியர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதேபோல் மற்ற ஆசிரியர்களும் பல்வேறு டெக்னாலஜியை பயன்படுத்தி பாடங்களை எடுக்க வேண்டும். மாணவர்களுக்கு பாடம் நடத்தும் போது, நல்லது, கெட்டது சொல்லி தர வேண்டும். நம்மை தேடி வருகின்ற மாணவர்களை ஒவ்வொரு ஆசிரியரும் நம்முடைய பிள்ளைகள் என்ற எண்ணத்தில் அணுக வேண்டும் என மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஓசூர், மூக்கண்டப்பள்ளி செயின்ட் ஜோசப் கல்லூரி கூட்டரங்கில், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலான அடைவுத் தேர்வு 2025 ஆய்வுக் கூட்டம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார் , முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன் , ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா, அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேசன் டிஜிட்டல் ஈக்வலைசர் திட்ட இயக்குநர் .பாஸ்கரன் தீனதயாளன், மாநகராட்சி சுகாதார குழு தலைவர் மாதேஸ்வரன், ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் , மேற்கு மாவட்ட அமைப்பாளர் சுமன் மாவட்ட கல்வி அலுவலர்கள், பெற்றோர் ஆசிரிய கழக நிர்வாகிகள், பள்ளி தலைமையாசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



ஓரணியில் தமிழ்நாட்டை முன்னேற்றிடும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்று நீலகிரி மாவட்ட கழகச் பெறுப்பாளர் கே.எம் ராஜு, தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நீலகிரி மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தில் இருந்த 10ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் உதகை கலைஞர் அறிவாலயத்தில் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார் அவை தலைவர் போஜன் உட்பட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.3.56 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். வசிஷ்டபுரம் பகுதியில் பொதுமக்களுக்கு புதிய மின் மாற்றியை துவக்கி வைத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன்

### ஜூன் 30 (2015)



கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**